# கடற்கரை கவியரங்கு எண் – 614

நாள் 05-06-2022

## மனமே தேடு!

நெருப்பென குவித்தேன் நீரென அணைத்தேன்!
கருப்பொருள் இன்றிக் கவிதையில் நுழைந்தேன்!
விருப்புகள் விலக்கி வேதனை தொலைத்து,
மருவில்லா வாழ்வாய் மகத்துவம் தேடிட,

அருளாய் மனமாய் அவனை நினைத்தேன்!
தருவாய்த் தெரிந்திட தோல்விகள் மறைந்திட,
உருவாய் நிறைந்து உணர்வில் கலந்திட்ட,
பரம்பொருள் என்றதைப் பக்குவம் செய்திட,

ஒருமனம் இருந்து ஒரு மனம் பிறக்கும்,
அருளோ எதுவோ அதுதான் நிலையோ!
பெருமை சொல்லும் பேதமை எதற்காம்?
தருவாம் வாழ்வியல் தகர்தலும் ஏனோ?

கருவில் சுமந்த கற்பனை யெல்லாம்,
மருவின்றி நிகழ்த்தும் காலம் வருமோ?
விருப்பும் வெறுப்பும் வேறல்ல வென்றே,
அருளாம் அதனை அகத்தில் தேடுவனே!

**கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**
*05-06-2022 (12.30 PM)*

